**தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்**

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.

தொலைபேசி : 044– 22201337

மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

முன்னிலை : மு. மாலிக் பெரோஸ்கான், இ.ஆ.ப., (ஓ)

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

**ஆணை எண். 164/மா/2022**

**நாள் : 01.11.2022**

திரு.R. மயில்சாமி,
மதுரை. – முறையீட்டு மனுதாரர்

உதவி ஆணையர், மண்டலம்–02,
மதுரை மாநகராட்சி, மதுரை – எதிர்மனுதாரர்

மதுரை மாவட்டம், புதுவிளாங்குடி, செம்பருத்தி நகர், அய்யப்பன் தெரு, மனை எண்.5–ல் வசிக்கும் திரு. R. மயில்சாமி என்பவரின் 28.09.2022 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 03.10.2022-ல் பெறப்பட்டு 164/மா/2022 என எண்ணிடப்பட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

**ஆணை**

மதுரை மாவட்டம், புதுவிளாங்குடி, செம்பருத்தி நகர், அய்யப்பன் தெரு, மனை எண்.5–ல் வசிக்கும் திரு.R.மயில்சாமி என்பவர் தனது முறையீட்டு மனுவில், கீழ்க்கண்ட புகார்களை தெரிவித்துள்ளார்:

" மதுரை மாநகராட்சி வார்டு எண் 1, மண்டலம்–02 (வடக்கு) விளாங்குடி பிட் 1 – நேருஜி மெயின் ரோட்டில் புகழ்மஹால் உள்ளது. இவ்மஹால் ரோட்டின் ஓரத்தில் கட்டப்பட்டுள்ளது. புகழ் மஹாலுக்கு வாகனங்கள் நிறுத்துவதற்கு (parking) இடம் வசதி இல்லை. இதனால் விஷேச காலங்களில் மஹாலுக்கு வருபவர்கள் சாலையின் இரண்டு பக்கங்களிலும் வாகனம் நிறைந்து

வழிவதால், பள்ளி, கல்லூரி ஆம்புலன்ஸ் மற்றும் பயணிகள் வாகனங்கள் இவ்வழியாக ஏதும் செல்ல முடியாமல், பொதுமக்கள் பெரிதும் சிரமத்திற்கு உள்ளாகி வருகிறார்கள். பார்க்கிங் வசதி இல்லாத புகழ் மஹாலுக்கு மாநகராட்சியால் எப்படி அனுமதி வழங்கப்பட்டு இருக்கிறது. மிகவும் கண்டிக்கத்தக்கது. மேலும் இம்மஹால் சொக்கன்குளம் (ஊரணி) புல எண்.113/1Bயாகும். இதில் சில சதுர அடி பகுதிகள் ஆக்கிரமிப்பு செய்து கட்டிடம் கட்டப்பட்டுள்ளது. கட்டிட அனுமதி பெறுவதற்கு மாநகராட்சிக்கு முழுமையான ஆவனங்கள் சமர்ப்பிக்கவில்லை என்பது தெரிய வருகிறது.

விளாங்குடி நேருஜி மெயின் ரோட்டில் உள்ள புகழ் மஹால் பொதுமக்கள் பயன்பாட்டிற்கான கட்டிடம் என்பதால் 1973 ஆம் ஆண்டைய தமிழ்நாடு நகர் ஊரமைப்புச்சட்டம் பிரிவு 33ன்படி அக்கட்டிடத்திற்கு நகர் மற்றும் ஊரமைப்பு திட்ட இயக்கத்தின் (Directorate of Town and Country Planning) ஒப்புதல் பெறவில்லை.

மேலும் புகழ் மஹால் கட்டிடம் பொதுமக்கள் பயன்படுத்தக்கூடிய இடம் என்பதால் தமிழ்நாடு பொது கட்டிடங்கள் (உரிமம்) சட்டம் 1965 பிரிவு 2(8)படி (Section 2(8) of the Tamil Nadu Public Buildings (Licensing) Act 1965 –ன்படி முறையாக உரிமம் பெறவில்லை. பொதுமக்கள் பயன்பாட்டிற்கான கட்டிடம் என்பதால் மக்கள் பயன்படுத்துவதற்கு முன்னதாக வருவாய்துறையின் முன் அனுமதி பெறவில்லை. நகர் ஊரமைப்பு சட்டம் 1971 பிரிவு 49–ன்படி தேவைப்படும் அனுமதிக்கு மாறாக இக்கட்டிடம் கட்டப்பட்டுள்ளது. கட்டிட அனுமதி வரைபடத்தின்படி மஹால் கட்டவில்லை. மேலும் சொத்துவரி விதிப்பும் குறைவான மதிப்பீடு செய்து, வரி செலுத்தி வருகிறார்கள். இதனால் மதுரை மாநகராட்சிக்கு வருவாய் இழப்பு ஏற்பட்டுள்ளது. இது குறித்து நடவடிக்கை எடுக்க 20.09.2022ம் தேதியில் மதுரை மாநகராட்சி ஆணையர் மற்றும் உதவி ஆணையர் மண்டலம்–2 (வடக்கு) அவர்களுக்கு பதிவு தபாலில் மனு அனுப்பியுள்ளேன். மேற்படி புகழ் மஹால், உரிய துறைகளில் முறையான அனுமதி பெறாமலும், பார்க்கிங் (parking) வாகன நிறுத்தம் வசதி இல்லாமலும், குளம் ஆக்கிரமிப்பு சர்வே எண்.113/1Bல் சில பகுதி ஆக்கிரமிப்பு செய்தும், குறைந்த வரி செலுத்தி வரும் புகழ் மஹால் முறைகேடான கட்டுமானத்தின் மீது நகர் ஊரமைப்புச்சட்டம், 1971ன் பிரிவுகள் 56 மற்றும் 57ன் கீழ் கட்டிட வளாகத்தை பூட்டுதல் மற்றும் முத்திரையிடுதல் (lock and seal) போன்ற நடவடிக்கைகளை விரைவாக எடுத்திடவும், இதற்கு உடந்தையாக இருந்த முன்னாள் மற்றும் இந்நாள் மாநகரரட்சி அலுவலர்கள் மீது துறைரீதியான கடுமையான நடவடிக்கை எடுக்க உத்தரவிடுமாறு மாண்புமிகு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் அவர்களை வேண்டிக்கொள்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

2) முறையீட்டு மனுதாரரின் புகார் மனு மீதான விரிவான அறிக்கையை அனுப்பக்கோரி மதுரை மாநகராட்சி, மண்டலம்–02, உதவி ஆணையருக்கு இம்முறைமன்ற நடுவ 06.10.2022 நாளிட்ட அறிவிப்பு அனுப்பப்பட்டது.

3) மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் ஆகியோர் இம்முறைமன்ற நடுவ 06.10.2022 நாளிட்ட அழைப்பாணைகள் மூலம் 11.10.2022 அன்று நேரடி விசாரணைக்கு நாகர்கோவில் முகாமிற்கு ஆஜராகுமாறு அழைக்கப்பட்டனர்.

4) மனுதாரர் 11.10.2022 அன்றைய நேரடி விசாரணையில் ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளார்.

"மதுரை மாநகராட்சி, வார்டு எண்.1, மண்டலம்–2 (வடக்கு) விளாங்குடி பிட்–1 நேருஜி மெயின் ரோட்டில் புகழ் மஹால் உள்ளது. ரோட்டின் ஓரத்தில் இம் மஹால் கட்டப்பட்டுள்ளதால் வாகனங்கள் நிறுத்துவதற்கு (Parking) இட வசதி இல்லை, இதனால் விஷேச காலங்களில் மஹாலுக்கு வருபவர்கள் சாலையின் இரண்டு பக்கங்களிலும் வாகனம் நிறுத்தி செல்வதால் போக்குவரத்து இடைஞ்சல் ஏற்படுகிறது. மேலும், இம் மஹால் சொக்கன் குளம் (ஊரணி) புல எண்.113/1B ல் சில சதுர அடி பகுதிகள் ஆக்கிரமிப்பு செய்து கட்டடம் கட்டப்பட்டுள்ளது. இக்கட்டிடம் 1973–ம் ஆண்டைய தமிழ்நாடு நகர் ஊரமைப்புச் சட்ட பிரிவு 33–ன் படி நகர் மற்றும் ஊரமைப்பு இயக்ககத்தின் ஒப்புதலும் மற்றும் உரிமமும் பெறவில்லை. இக்கட்டிடத்திற்கு சொத்து வரியும் குறைவாக மதிப்பீடு செய்யப்பட்டுள்ளதால் மாநகராட்சிக்கு வருவாய் இழப்பும் ஏற்பட்டுள்ளது. மேற்படி புகழ் மஹால் முறையான அனுமதி பெறாமலும், வாகன நிறுத்த வசதி இல்லாமலும் குளத்தின் சில பகுதி ஆக்கிரமிப்பு செய்து கட்டியுள்ளதாலும் அக்கட்டடத்தை நகர் ஊரமைப்பு சட்டம், 1971, பிரிவு 56 மற்றும் 57 ன் கீழ் கட்டிட வளாகத்தை பூட்டுதல் மற்றும் முத்திரையிடுதல் (Lock and Seal) நடவடிக்கை எடுத்திடவும், இதற்கு உடந்தையாக இருந்த மாநகராட்சி அதிகாரிகள் மீது தேவையான நடவடிக்கை எடுத்திடவும் ஆவன செய்யுமாறு இம்முறைமன்ற நடுவத்தைக் கேட்டுக்கொள்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

5) 11.10.2022 அன்றைய நேரடி விசாரணையில் மதுரை மாநகராட்சியின் உதவி வருவாய் அலுவலர் ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளார்:

"மனுதாரர் குறிப்பிட்ட மதுரை மாநகராட்சி மண்டலம்–02 நேருஜி மெயின் ரோட்டில் உள்ள புகழ் மஹாலை நேரடியாக ஆய்வு செய்து ஆக்கிரமிப்பு ஏதும் இருப்பின் அதற்கான நோட்டீஸ்கள் வழங்கப்பட்டு, அதற்கு அடுத்தகட்டமாக Demolition Notice சம்பந்தப்பட்ட உரிமையாளருக்கு இன்னும் 20 நாட்களில் வழங்கப்படும் என்பதை இம்முறை மன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும் அங்கு வேறு ஏதேனும் ஆக்கிரமிப்புகள் இருந்தால் அதனையும் அகற்றிட தேவையான நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை இம்முறை மன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

6) முறையீட்டு மனுதாரரின் மனு மற்றும் வாக்குமூலம், மதுரை மாநகராட்சி உதவி வருவாய் அலுவலரின் வாக்குமூலம் ஆகியவை இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு பின்வரும் விவரங்கள் கண்டறியப்பட்டுள்ளன:

மனுதாரர் மதுரை மாநகராட்சி, வார்டு எண்.1, மண்டலம்(02) வடக்கு விளாங்குடி பிட்–1 நேருஜி மெயின் ரோட்டில் அமைந்துள்ள புகழ்மஹால் ரோட்டின் ஓரத்தில் கட்டப்பட்டுள்ளதால் வாகனங்கள் நிறுத்துவதற்கு (parking) இட வசதி இல்லை. இதனால் விஷேச காலங்களில் மஹாலுக்கு வருபவர்கள் சாலையின் இரண்டு பக்கங்களிலும் வாகனம் நிறுத்தி செல்வதால் போக்குவரத்து இடைஞ்சல் ஏற்படுகிறது. மேலும், இம்மஹால் சொக்கன்குளம் (ஊரணி) புல எண். 113/1Bல் சில சதுர அடி பகுதிகள் ஆக்கிரமிப்பு செய்து கட்டடம் கட்டுப்பட்டுள்ளது. நகர் மற்றும் ஊரமைப்பு இயக்ககத்தின் ஒப்புதலும் மற்றும் உரிமமும் பெறவில்லை. இக்கட்டிடத்திற்கு சொத்து வரியும் குறைவாக மதிப்பீடு செய்யப்பட்டுள்ளதால் மாநகராட்சிக்கு வருவாய் இழப்பும் ஏற்பட்டுள்ளது. இதற்கு உடந்தையாக இருந்த மாநகராட்சி அதிகாரிகள் மீது தேவையான நடவடிக்கை எடுத்திடவும் கோரியுள்ளார்.

மனுதாரர் சுட்டிக்காட்டியுள்ள கட்டிடத்தின் உரிமையாளருக்கு stop work notice/notice calling for approved plan, அதற்கு அடுத்து lock and seal notice அதன் பின்னர் கட்டிடம் கட்டிட உரிமையாளரின் பயன்பாட்டில் உள்ள காரணத்தினால் கட்டிட உரிமையாளருக்கு Demolition Noticeம் வழங்கப்பட்டிருக்க வேண்டும். ஆனால் மனுதாரர் தமது புகார் மனுவை மதுரை மாநகராட்சிக்கு அனுப்பியும் இன்னும் இப்பொருள் தொடர்பாக எந்தவித நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை என்பதை மதுரை மாநகராட்சி உதவி வருவாய் அலுவலரின் வாக்குமூலத்திலிருந்து தெள்ளத்தெளிவாக அறிந்து கொள்ள முடிகிறது.

உரிய அனுமதியின்றியும் விதி மீறியும் கட்டப்பட்டுள்ள இக்கட்டடத்திற்கு Tamil Nadu Town and Country Planning Act–ன் பிரிவுகள் 56(1) மற்றும் 57 உடன் படிக்கப்பட்ட பிரிவு 85–ன் கீழ் Stop work Notice/Notice calling for approved plan அறிவிப்பினையும் அதன் தொடர்ச்சியாக வழங்கப்பட வேண்டிய Lock and Seal and demolition notice ம் வழங்கிட உரிய நடவடிக்கை எடுக்காமல் தங்களது கடமையை செவ்வனே செய்யாமல் மெத்தனமாக செயல்பட்டுள்ள சம்மந்தப்பட்ட அலுவலர்கள் மீது நடைமுறையில் உள்ள சட்டப்பிரிவுகளின்கீழ் துறைரீதியாக ஒழுங்கு நடவடிக்கை எடுக்க இம்முறைமன்றம் மதுரை மாநகராட்சி ஆணையருக்கு பரிந்துரைத்து ஆணையிடுகிறது. மேலும் உதவி வருவாய் அலுவலர் தமது வாக்குமூலத்தில் குறிப்பிட்டுள்ளவாறு அக்கட்டிடத்தை ஆய்வு செய்து ஆக்கிரமிப்புகள் ஏதும் இருப்பின் ஆக்கிரமிப்பினை அகற்ற மாநகராட்சியால் மேற்கொள்ளப்பட வேண்டிய தொடர் நடவடிக்கைகள் மற்றும் நீதிமன்ற நடவடிக்கைகளை மேற்கொள்ள ஆணையர், மதுரை மாநகராட்சியை அறிவுறுத்தியும் இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது.

Pro-active and preventive action by the field officers of this Zone on the issue is totally absent. Unless a petition of this kind is raised, the officers concerned do not take cognizance of such violations on their own in a pre-emptive manner. This does not bring any repute to the Zonal Officials entrusted with the responsibility of keeping the public places free of encroachment, planning violations and visible illegalities that spur the social activists to highlight the infringements before a Forum of this kind. The Commissioner, Madurai Corporation is directed to issue suitable instructions to the

officers to be pro-active, sensitive and effective in curbing violations as noticed in this case.

2022-ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 01 -ஆம் நாள் என்னால் கையொப்பமிட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணையிடப்படுகிறது.

//ஒப்பம்//

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்

1. திரு R. மயில்சாமி,
   மனை எண்.5,
   அய்யப்பன்தெரு,
   செம்பருத்தி நகர்,
   புதுவிளாங்குடி, மதுரை–625 018.
2. ஆணையர்,
   மதுரை மாநகராட்சி,
   மதுரை.
3. துணை ஆணையாளர்,
   மதுரை மாநகராட்சி,
   மதுரை. (He is requested to ensure the implementation of this order)
4. உதவி ஆணையர்,
   மதுரை மாநகராட்சி,
   மதுரை.
5. நகராட்சி நிர்வாக இயக்குநர்,
   நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
   எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
   ராஜா அண்ணாமலைபுரம்,
   சென்னை – 600 028.
6. இணை இயக்குநர்
   ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer)
   நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
   எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
   ராஜா அண்ணாமலைபுரம்,
   சென்னை – 600 028.

நகல்

மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச் செயலர்.
இகோ/உதிரிகள்

//ஆணைப்படி/அனுப்பப்படுகிறது//

தமிழ்நாடு மாநில உள்ளாட்சி அமைப்புகள் முறை மன்ற நடுவம் சென்னை – 600 032

01/11/22

செயலாளர்